# அமெரிக்காவின் மிதக்கும் ஆஸ்பத்திரி இலங்கைவருகிறது

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 229
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 12 ஜு. ஆகிர் 23 வியாழக்கிழமை [28-9-67]

## 10 மாதம் தங்கியிருந்து பணி செய்யும்

கொம்பனித்தெரு, புதன்

அமெரிக்காவின் மிதக்கும் ஆஸ்பத்திரியான ''ஹோப்'' என்ற நீராவிக்கப்பல் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் இலங்கைக்கு வர விருப்பதாகத் தெரிகின்றது. இதுசம்பந்தமாக அமெரிக்காவைச் சேர்ந்த ஆறு டாக்டர்கள் இலங்கை வந்து சுகாதார அமைச்சுடன் கலந்தாலோசித்துச் சென்றுள்ளாதாகவும் தெரிகின்றது.

இக்கப்பல் இலங்கையில் சுமார் 10 மாதங்கள் தங்கியிருந்து ஏழைகளுக்கு வைத்திய சிகிச்சை அளிக்கும். இந்தக் கப்பலில் அமெரிக்காவைச் சேர்ந்த சுமார் 150 டாக்டர்களும், 25 தாதிகளும், 10 ஆய்வுகூட ஆராய்ச்சியாளர்களும், புகைப்படப் பிடிப்பாளர்களும் கடமையாற்றுவார்கள், இலங்கையைச் சேர்ந்த சிலதாதிகளும் இங்கு கடமையாற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

இக்கப்பலில் சத்திர சிகிச்சைப் பகுதியில் 'ரெலி

[5-ம் பக்கம் பார்க்க]

# சிங்கள மகாவித்தியாலயம் விஞ்ஞானகூட வசதிபெறும்

## வடபகுதியில் விஞ்ஞானகூடம் பெறும் ஓரேஒரு பாடசாலே

கொழும்பு, புதன்

வடமாகாணத்திலுள்ள பாடசாலைகளில் ஒரேயொரு பாடசாலைக்குமட்டும் விஞ்ஞானகூட வசதியளிக்க கல்விஅமைச்சு முன்வந்திருக்கிறது. இந்தப்பாடசாலையில் இதுவரை விஞ்ஞான மாணவர் எவருமே இல்லை. ஆயினும் விஞ்ஞானகூடம் அமைப்பதற்கான வேலைகள் விரைவில் ஆரம்பமாகவிருக்கின்றன. யாழ்ப்பாணநகரிலுள்ள சிங்கள மகாவித்தியாலயமே இந்த அதிர்ஷ்டம்பெறும் பாடசாலையாகுமெனத் தெரிகிறது.

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் வடமாகாணத்தில் எந்தவொரு பாடசாலைக்கும் விஞ்ஞானகூட வசதி அளிக்கப்படவில்லை. தென்னிலங்கையிலும் பார்க்க வட இலங்கையிலுள்ள பாடசாலைகளே விஞ்ஞானகூட வசதிகள் அதிகமுள்ள பாடசாலைகளாக இருக்கின்றனவென்றும் தென்னிலங்கையிலுள்ள பாடசாலைகளில், வட இலங்கையிலுள்ள பாடசாலைகளில் போன்று விஞ்ஞான கூட வசதிகள் அமைக்கப் படும் வரை வட இலங்கையில் வேறு எந்தப் பாடசாலைக்கும் விஞ்ஞானகூட வசதி செய்யப்பட மாட்டாது என்று கல்விஅமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல சமீபத்தில் பல பொது வைபவங்களிலும் கூறிவந்தார். கல்வி அமைச்சரின் இப் பேச்சுப் பற்றி தமிழ் எம். பி. க்களும் பொது ஸ்தாபனங்களும் கண்டனம் தெரிவித்திருந்தன. [2-ம் பக்கம் பார்க்க]

## ''மாவட்ட சபையல்ல; சமஷ்டியே குறிக்கோள்''

### மட்டக்களப்பு எம். பி. கூறுகிறர்

குரும்பசிட்டி, புதன்

''சிறுபான்மை இனத்தவரின்சகல பிரச்னைகளுக்கும் பண்டாரநாயகா — செல்வநாயகம் ஒப்பந்தத்தின் அடிப்படையில்தான் தீர்வு காணமுடியும். எந்தக் காலத்திலாவது தமிழரசுக் கட்சி இவ் ஒப்பந்தத்தின் ஷரத்துக்களை நிறைவேற்றி தமிழ்மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்கும். எந்த அரசியல் கட்சியும் ஆட்சிபீடத்தில் அமரும் போது பண்டா — செல்வா ஒப்பந்தத்தை அமுலாக்கும்படி கோருவோம். 1957-ம் ஆண்டில் இந்த ஒப்பந்தம் அமுலாகாதபடி சிங்கள பௌத்த பிக்குகள் வகுப்புவாதப் பிரசாரம் மேற்கொண்டு இருந்தபோது தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு.ஜி. ஜி. பொன்னம்பலமும் தமிழ்இனத்தின் அழிவுக்கு வழிகோலும் என எதிர்ப்புக்காட்டி ஒப்பந்தம் நிறைவேருதபடி தடைசெய்தார்.''

இவ்வாறு மட்டக்களப்பு முதல் எம். பி.யும், மேயருமான திரு. செ. இராசதுரை அமரர் வன்னியசிங்கத்தின் நினைவுதினவிழாவில் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். தமிழரசு வாலிப முன்னணியினரின் ஆதரவில் தெல்லிப்பழை கொல்லங்கலட்டிப் பிள்ளையார் ஆலய வீதியில் இவ்விழா நடைபெற்றது.

திரு. இராசதுரை மேலும் பேசுகையில் கூறியதாவது: மாவட்டசபைக்கான காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. மாவட்ட சபை அமைப்பது மட்டும் எமது கட்சிக் குறிக்கோள் அல்ல. இந்த நாட்டில் சமஷ்டி அரசியல் அமைப்பை நிறுவுவதே எமது லட்சியமாகும், நிர்வாக ஆட்சிமுறை நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவலாக்கப்பட மாவட்ட சபை பயன்அளிகரும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் இல்லாது சில

[6-ம் பக்கம் பார்க்க]

## நாவலர் மகாவித்தியாலயம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை, மகாவித்தியாலயமாக அந்தஸ்து உயர்த்தப்படவிருக்கிறது. நாவலர் மகா வித்தியாலயத்துக்கு பட்டதாரி ஆசிரியர்களும் விரைவில் நியமிக்கப் படவிருக்கிறார்கள். இப் பாடசாலையின் முகப்புக் கட்டிடம் திருத்தப்பட்டு இப்பொழுது புதுப் பொலிவுடன் திகழ்கிறது.

## கோடீஸ்வரன் அப்பீல்நிதி

### ஜி. ஜி. யும் உதவி அளிப்பார்

கொழும்பு, புதன்

கோடீஸ்வரன் வழக்குத் தீர்ப்பை எதிர்த்து பிரிவி கவுன்ஸிலுக்கு அப்பீல் செய்வதற்கு தனிப்பட்ட முறையில் தம்மாலான நிதி உதவி அளிப்பதாக தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம்.பி. யுமான திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் தம்மைச் சந்தித்த அரசாங்கம் எழுது வினைஞர் சங்கத்தூது கோஷ்டியிடம் தெரிவித்துள்ளாராம்.

சங்கத் தலைவர் திரு. ப. வித்தியானந்த சர்மா, செயலாளர் திரு. இ.இராமநாதன்

[6-ம் பக்கம் பார்க்க]

## ''இறந்தவருக்கு எதிரிகள் இல்லை''

### நாவலர் சந்தி கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வியா.

''முதலாம் எதிரி, எனது மச்சான் இராசையாவுக்கு சின்னமேளம் இராசலட்சுமியுடன் தொடர்பு ஏற்படச் செய்தார். இராசையா எனது சகோதரியைத் திருமணம் செய்திருந்தபடியால் எனக்கு இது பிடிக்கவில்லை. 1-ம் எதிரிக்கு ''மச்சான் ராசையாவைக் கூட்டிச் சென்றுகெடுக்காதே'' என்று கூறினேன். 1-ம் எதிரி தலையிடவேண்டாம் என்றார். சம்பவத்திற்கு முதல்நாள் 2-ம் எதிரியுடன் இதுசம்பந்தமாகச் சரவுப்பட்டேன். அவர் அடித்தார்; நானும் அடித்தேன். பொலிசில் புகார் செய்தேன். நான் மகேந்திரன் பற்றறி சேவிஸ் கடைக்கு போய் வருவது வழக்கம். எதிரி நான் அங் இருப்பதைக் கண்டிருப்பார். இறந்தவருக்கும் எதிரிகளுக்கும் எவ்வித தொடர்புமில்லை; கோபமுமில்லை. அவருக்கு எதிரிகள் கிடையாது.''

நாவலர் சந்தி படுகொலை வழக்கில் சாட்சியமளித்த கந்தையா குலசிங்கம் மேற்கண்டவாறு நேற்று கூறினார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர்திரு. வி. மாணிக்கவாசகர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 1965-ம் ஆண்டு நவம்பர்மாதம் 8-ந் தேதியாழ்ப்பாணம். - காங்கேசன்துறை வீதியில் பதினெட்டுவயது சுப்பிரமணியம் தெய்வேந்திரம் என்ற இளைஞரை [illegible]

[6-ம் பக்கம் பார்க்க]

## 'முதலாளித்துவ அரசியல்முறையே சாதிக் கொடுமைக்கு காரணம்'

### யாழ்ப்பாணத்தில் எட்மண்ட் சமரக்கொடி

யாழ்ப்பாணம், வியா.

''சாதிக்கொடுமை நிலவுவதற்கு முதலாளித்துவ அரசியல் அமைப்பு முறையே காரணம்'' என்று லங்கா சமசமாஜ கட்சி[புரட்சிவாத] தலைவரும், முன்னாள் எம். பி. யுமான திரு. எட்மண்ட் சமரக்கொடி நேற்றுமுன் தினம் யாழ்ப்பாணத்தில் [illegible] பேசுகையில் கூறினார்.

நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் சன்மார்க்க ஐக்கிய வாலிபர் சங்கத்தினர் நடாத்திய முதலி சின்னத்தம்பியின் 24-வது ஞாபகார்த்த விழா நடைபெற்றது. திரு. எட்மண்ட் சமரக்கொடி இக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.

கோப்பாய் எம். பி. திரு. கதிரவேலுப் பிள்ளைபேசுகையில் கூறியதாவது:-

''இலட்சியமும் சாதனையும் ஒரே வழியில் அமைய வேண்டும். பலாத்காரம் சாதனையாக அமையும் போது இலட்சியம் என்ற புனித எல்லையைநாம் அடையமுடியாது. அமைதியை அமைதியாகவும், அன்பை அன்பாகவுமே நிலைநாட்ட வேண்டும். இன்று நாட்டிலுள்ள நிலையைப் பார்க்கும் போது கடந்த 25 ஆண்டு

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

ஒரு பொழுதும் மற்றவரின் எண்ணத்தைப் புண்படுத்தாதீர். எல்லோரிடத்திலும் அன்புடன் இருங்கள். எவரை எல்லாம் திருப்தி ஆக்க முயல்கிறீர்களோ அவர்கட்குத்தொண்டு செய்யுங்கள். அவர்களிடம் அன்புகொண்டு அவர்களுக்காகத் தியானம் செய்து வழிபடுங்கள்.

—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram:,EELANADU Jaffna
Post Box; 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு புரட்டாதி 12உ (28-9-67)


## இலங்கை-சீன ஒப்பந்தம்

இலங்கை-சீன, அரிசி-ரப்பர் பண்டமாற்று வர்த்தக ஒப்பந்தம் இவ்வருடம் புதுப்பிக்கப்படமாட்டாதென்றே தெரிகிறது. இந்த ஒப்பந்தம் இன்னும் இரண்டு தினங்களில் காலாவதியாகிறது. சீன அரிசி நமக்குத்தேவையில்லையென்று விட்டுவிடுவதா அல்லது எது எப்படிப் போனாலும் நமக்கு அரிசிதான் வேண்டும் என்று காலில் விழுவதா?

இலங்கைக்கு அரிசித் தட்டுப்பாடு ஏற்பட்ட நேரத்தில், இதர நாடுகளெல்லாம் கைவிரித்துவிட்ட சமயத்தில் இலங்கைக்கு அரிசி கொடுப்பதற்கு சீனு முன்வந்தது. இதேசமயம் சீனுவுக்கும் ரப்பர் தேவையாகஇருந்தது. அரிசியை வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாக சீனுவுக்கு ரப்பர் கொடுக்க இலங்கை முன்வந்தது. இந்த அடிப்படையில்இலங்கையும் சீனுவும் பண்டமாற்று ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டன. இந்த ஒப்பந்தம் இன்றுபோல் ஐக்கியதேசியக்கட்சி இலங்கையில் ஆட்சிப்பீடத்திலிருந்தபோதே கைச்சாத்திடப்பட்டது. சீனுவுக்கும் இலங்கைக்குமிடையில் அரசியல்ஆட்சிமுறையிலும் இலட்சியத்திலும் வேற்றுமையிருப்பினும் இருநாடுகளும் வர்த்தக ஒப்பந்தம் செய்துகொண்டன. இதன்மூலம் நட்புறவு வளர்ந்தது. இலங்கை ஆட்சிபீடத்தில் மாற்றம் ஏற்பட்டது. அரிசி—ரப்பர் பண்டமாற்று வர்த்தகத்துடன் நிற்காது ரயில் பெட்டி முதலிய இதர பொருள்களையும் சீனு இலங்கைக்குக் கொடுத்தது. இருநாடுகளுக்கிடையிலும் உறவும் தொடர்பும் வலுப்பெற்றது. முன்னையதைவிட பின்னைய ஆட்சியே தங்கள் சோஷலிஸக் கொள்கையுடன் நெருங்கிய பிணைப்பைக் கொண்டிருப்பதாக சீனு கருதியது. எனினும் 1965-ம் ஆண்டில் இலங்கையில் மீண்டும் ஆட்சிபீடத்தில் மாறுதல் ஏற்பட்டது. ஆயினும்1965ம் ஆண்டிலும் 1966ம் ஆண்டிலும் இலங்கை-சீன பண்டமாற்று ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்குமுன் எப்போதுமில்லாதபடி சென்றவருடத்தில் தான் இலங்கைக்கு மிகக்கடுமையாக அரிசித்தட்டுப்பாடு ஏற்பட்டது. உலகசந்தையிலும் அரிசிக்குப்பெரும் தட்டுப்பாடு. ஆனுலும் அரிசி தருவதற்கு சீனு ஒப்புக்கொண்டது. உலக சந்தையிலுள்ள விலையைவிட சிறிது கூடுதலாக விலைகொடுத்து ரப்பர் வாங்கவும் சீனு முன்வந்தது.

இலங்கையிலுள்ளசீனத் தூதரகத்துக்கு வந்த 'மாவோபட்டிகளை' சுங்கப் பகுதியினர், [தமது சட்டவிதி முறைப்படிதான்] தடுத்ததும், சீனத் தூதரகத்துக்கு வந்த சில பார்சல்கள் துறைமுகத்தில் உடைக்கப்பட்டு திருட்டுப்போனதும் இலங்கை அரசாங்கத்தின் மீது சீன அரசாங்கத்துக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது. ஆட்சேபக் கடிதங்களும் சீனுவில் ஆர்ப்பாட்டமும் தொடர்ந்தன. இலங்கை அரசாங்கம்என்னதான்விளக்கம் கொடுத்தபோதிலும் சீன அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. வர்த்தக ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கானபேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு இலங்கை தயாராகஇருக்கிறது. ஆயினும் சீன அரசாங்கம் அதற்குத் தயாராக இல்லை. ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாவிடில் நமக்கு அரிசி வராது; நமது ரப்பரை சீனு வாங்கமாட்டாது. நமக்குத் தேவையான அரிசி முழுவதும் நம் நாட்டில்உற்பத்திசெய்யும்நிலை இன்னும் ஏற்படவில்லை. இதர இடங்களிலிருந்து அரிசி வாங்குவதற்கு அரசாங்கம் முயற்சி செய்கிறது. நமது ரப்பரைவிற்பதற்கும் வேறுஇடங்களை நாடவேண்டும் அப்படியானுல் சீனுவுடனுள்ள நமது உறவும் தொடர்பும் என்னவாகும்.

இன்றைய நமது அரசாங்கமும் முன்னைய அரசாங்கமும் உள்நாட்டில் ஜனநாயகசோஷலிஸசமுதாயத்தை உருவாக்குவதையே கொள்கையாகக் கொண்டவை. சகலநாடுகளுடனும் நட்புறவுடன் வாழ்வதும் வல்லரசு முகாம்களுடன் சேராத நடுநிலைமைக் கொள்கையுமே நமது வெளிவிவகாரக் கொள்கையாகும். சீனுவைப்பொறுத்தவரையில் இலங்கையின் இன்றையஅரசாங்கத்தைவிட முன்னைய ஆட்சியாளரிடத்தில் அதிக நம்பிக்கை கொண்டிருக்கிறது.

இந்நிலையில் இலங்கைக்கும் சீனுவுக்கும் நல்லுறவு கெடாமலிருப்பதற்கு இலங்கையின் முன்னைய ஆட்சியாளரான இன்றைய எதிர்க்கட்சியினர் உதவிசெய்ய முடியும். சீனுவின் உறவும் அரிசி-ரப்பர் ஒப்பந்தமும் இலங்கையைப்பொறுத்தவரையில் ஒரு கட்சிப் பிரச்னையல்ல. நாட்டின் வெளிவிவகாரக் கொள்கையும் தேசியப் பிரச்னையும் தேசிய மானமும் சம்பந்தப்பட்ட விஷயங்கள்.

சீனுவிடமிருந்து அரிசி வாங்குவது இப்போது தேசீயமானம் சம்பந்தப்பட்டதாக இருந்தால் இலங்கையின் அரசியல், சமூக ஸ்தாபனங்கள் மக்கள் அனைவரும் ஒரே குரலில் பதிலளிக்கவேண்டும். சீன ஆட்சேபம் சம்பந்தமாகவோ இலங்கையின் பதில் பற்றியோ எதிர்க்கட்சியினர் இன்னும் தமது நிலையைத் தெளிவுபடுத்தவில்லை.

அரிசி-ரப்பர் ஒப்பந்தமும் சீன-இலங்கை உறவும் தேசீயப்பிரச்னையாதலால் எதிர்க்கட்சித் தலைவர்களை பிரதமர் அழைத்து அவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறவேண்டும். எதிர்க்கட்சியினரும் இதில் ஒத்துழைக்கவேண்டியது அவசியம்.

# 'வீண் செலவைக் குறைத்து சைவத்தை வளருங்கள்'

## கைதடிசைவ மகாநாட்டில் சுவாமிநாததம்பிரான்

சாவகச்சேரி, புதன்

'ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் சோதியாம் சிவனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு நன்னெறிகள் பலவற்றைப் போதித்துவரும் சைவமதம் பண்டை நாட்களில் பல சைவப் பெரியார்களால் வளர்க்கப்பட்டுவந்தது. இன்றும் அம் முறையில் சைவம் வளரவேண்டுமாயின் இது போன்ற சைவ மாநாடுகளை நடாத்தல் அவசியம்''.

கைதடி இந்து வாலிபர் சங்க 4-வது சைவமாநாடு கைதடி மூர்த்தியாவத்தைக் கந்தசுவாமி ஆலய வீதியில் அமைக்கப்பட்ட ''திருஞானசம்பந்த நாயனுர் அரங்கில் தென்மராட்சிக் காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை தலைமையில் ஆரம்பமானபோது மாநாட்டை ஆரம்பித்துவைத்துப் பேசிய மதுரை ஆதீன நல்லூர் கிளை அதிபர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமிகள் மேற்கண்டவாறு கூறினுர்.

கைதடி வடக்கு கலைமகள் மாதர்சங்க மாணவிகளின் கடவுள் வாழ்த்துப்பாவுடன் ஆரம்பமான இவ்விழாவில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் மேலும் கூறியதாவது:

வருடா வருடம் ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்களின்போது ஆயிரக்கணக்கான ரூபா செலவுசெய்கிறுர்கள். அப்பணத்தைக் கொண்டு நிரந்தரமாக ஒரு பெரும் கோபுர வாயிலைக் கட்டலாம். திருவிழாக்களுக்குச் செலவிடும் பணத்தைக் கொண்டு சைவத்தை வளர்க்கலாம். ஆலயங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் சினிமாப் பாட்டுக்களைப் பாடிச் சமூகத்தைப் பாழ்படுத்துவதை விடுத்து தேவாரதிருவாசகங்களை ஒலிபெருக்கி, மக்களிடத்தே மேலும் பக்தியை வளர்க்கவேண்டும். கிராமங்கள் தோறும் ஆண்டுக்கொரு முறையாவது சைவ மகாநாடுகளை நடாத்திச் சைவத்தைவளர்க்கவேண்டும்.

சிவஸ்ரீ ஆ. சந்திரசேகரக் குருக்கள் அவர்களின் வேத பாராயணமும். பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, முதலியார் செ. முத்துத்தம்பி. முதலியார் செ. சின்னத்தம்பி ஆகியோரின் சொற்பொழிவும் நடைபெற்றன.

## சிங்கள...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வட இலங்கையில் எந்தப் பாடசாலைக்கும் விஞ்ஞான கூட வசதியளிக்கப் படமாட்டாதெனக் கூறி வந்துள்ள கல்வி அமைச்சர் யாழ்ப்பாணத்திலுள்ள சிங்கள மகா வித்தியாலயத்துக்கு விஞ்ஞான கூட வசதியளிப்பதற்கு முன் வந்துள்ளது, அரசியல் கல்வி வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறதாம்.

யாழ்ப்பாணம்சிங்களமகா வித்தியாலயத்தில்விஞ்ஞான கூடம் அமைப்பதற்காக கல்விஅமைச்சு ஒதுக்கியுள்ள நிதியில், ஒருபகுதி அதற்கான வேலைகளை விரைவில் ஆரம்பிக்கும்பொருட்டு வழங்கப்பட்டுவிட்டதாக அறியப்படுகிறது.

## இன்றைய பலன்

28-9-67
வியாழக்கிழமை
(புரட்டாதிமாதம்12உ)

நட்சத்திரம்-புனர்பூசம் இரவு 7-40 வரை மேல் பூசம்.

திதி-நவமி பகல் 11-17 வரை மேல் தசமி.

சுபநேரம்- 7-33-9-03

ராகுகாலம்-1-33—3-03

மேஷம்- நம்பிக்கை பலிதம், நலனும் சேரும்.

ரிஷபம்- செலவு மிகுதி, செய்தொழில் நஷ்டம்.

மிதுனம்- உறவில் வெடிப்பு, அபிப்பிராய பேதம்.

கடகம்- இல்லச்சிறப்பு, இனியவை நடக்கும்

சிம்மம்- ஆசாரக் குறைவு, அலைச்சல் மிகுதி.

கன்னி- மனையாட்சி மலரும், மகிழ்ச்சியுண்டு.

துலாம்-நல்லவை நடக்கும், நலமுடன் வாழ்வீர்.

விருச்சிகம்- சத்துரு பகை, சஞ்சல மனம்.

தனுசு- குடும்பத்தில் குதூகலம், மனநிறைவு.

மகரம்- வியப்பூட்டும் செய்தி, வீண் செலவு.

கும்பம்- இறைவழிபாடு, தனிவழிநாட்டம்.

மீனம்-பிரயாணச்சுகம், பிரிந்தவர் வருவர்.

சோதிடக் கலாநிதி—
திருமலை வேலுப்பிள்ளை

# ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்திலே ஒரு விருந்து நடந்தது. நல்ல முத்துச் சம்பா அரிசியைச் சமைத்திருந்தார்கள். ஏது இந்த அரிசி என்று விசாரித்ததில், இலங்கையிலேயே இப்போது நல்ல முத்துச் சம்பா விளைகிறதென்றும் இது இலங்கை அரிசி தானென்றும் அன்பர் சொன்னுர்.

பல வருஷங்களுக்கு முன் நல்ல முத்துச் சமபா அரிசி தமிழகத்திலிருந்து இங்கு வரும். பல மக்களும் அதை விரும்பிச் சாப்பிடுவர். அதற்கு அதிக கிராக்கியுண்டு. விலையும் அதிகம்.

இங்கு அந்த நெல்லைச் சாகுபடி செய்யமுடியாதா? சிதம்பரம் சிறு மணியன், சீரகச் சம்பா முதலிய நெல் வகைகளை இங்கு பயிரிட்டால் என்ன என்று கிளிநொச்சியில் கமம் செய்யும் ஒரன்பரை விசாரித்ததில் அந்த விதை நெல் இங்கு கிடைப்பதில்லை என்றும் அது கிடைத்தாலும் இந்த மண்ணுக்கு அது வேறு விதமாகவே விளைவதாயும் சொன்னுர். புரியவில்லை. விரை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா?

ಃ ಃ ಃ

நமக்கு ரேஷனில் கிடைக்கும் அரிசியைப் பலசமயங்களில் என்ன செய்வது என்றே தெரியவில்லையாம். அதை மாவாக்கி இடியப்பம் செய்வதாகச் சில தாய்மார்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். சிலசமயம் மிக நல்ல அரிசியாகக் கிடைக்கிறது. சீனம் பல பல மாதிரியான அரிசியை நமக்கு அனுப்புகிறதா அல்லது வேறு எங்கிருந்து இது கிடைக்கிறதென்பது தெரியவில்லை.

தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கக்கூடாது என்பர். நமது காருண்ய அரசாங்கம் உலகிலேயே எங்கும் இல்லாதபடி வாரத்துக்கு ஒரு கொத்து அரிசியை இலவசமாகக்கொடுக்கிறது. [இதை தமிழகத்தில் தெரிவித்த போது அவர்களால் நம்பவே முடியவில்லை.] அப்படித் 'தான'மாகக் கிடைக்கும் அரிசியைப் பற்றிக் குறை கூறக்கூடாதென்று பலர் பேசாமல் இருக்கிறுர்கள் போலும்.

ಃ ಃ ಃ

நேற்று கொழும்புப் பத்திரிகையில் ஒரு செய்தியைப் பார்த்தேன். மூன்று மூடை முத்துச்சம்பா அரிசியைத் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு ஒரு வள்ளத்தில் கொண்டுவந்ததாகவும் சுங்கக் காவலர்கள் நெருங்கியபோது அம்மூடைகளை கடலில் தள்ளிவிட்டதாயும் கடத்தல்காரர்கள் தெரிவித்ததாகச் சுங்க அதிகாரியே தெரிவித்திருக்கிறுர். சுதந்திரக் கட்சித் தலைவரான ஸ்ரீமாவோ அம்மையாருக்கு இச்செய்தி அர்ப்பணம்.

வட மாகாணத்திலிருந்து அரிசி ஏராளமாகத் தென்னிந்தியாவுக்குக் கள்ளக் கடத்தல் செய்யப்படுவதாக இடைத் தேர்தலுக்கு முன் ஒரு புதிய 'கரடி' விடப்பட்டது. தேர்தல்களுக்கு முன் உதாரணமாகக் 'கள்ளத்தோணிகள்' எண்ணிக்கை பல லட்சங்களுக்குச் சில பத்திரிகைகளில் உயர்வதுதான் வழக்கம். இந்திய துவேஷத்தைக் கிளப்பி, தங்களை அனுப்பி வைத்தால் இதைத் தடுத்து விடுவோமென்று மறைமுகமாகச்செய்யும் கட்சிப் பிரசாரமே இது.

(3-ம் கலம் பார்க்க)

[5-ம் கலத்தொடர்ச்சி]

இப்போது 'கள்ளத் தோணி'கள் அநேகமாக நின்றுவிட்டன. புளித்துப் போன இக்கதையை மீண்டும் சொன்னுல் ஏற்காது என்று, வட மாகாணத்திலிருந்து அரிசி தமிழகத்துக்குக் கடத்தப்படுவதாகப் புதிய 'ஸ்டண்ட்' விடப்பட்டுள்ளதுபோலும். அதாவது இலங்கையிலே அரிசிப் பஞ்சம் இருக்கையில், தமிழர் தங்கள் சுய லாபத்துக்காக, இங்கு விளையும் அரிசியை அனுப்புவதாகவும், அவர்கள் தேசத் துரோகிகளென்றும், இதற்குத் தேசிய அரசாங்கம் உடந்தையாக இருக்கிறதென்றும், தேர்தலில் தங்கள் பிரதிநிதியை அனுப்பிவைத்தால், இதை நிறுத்திவிடுவோம் என்றும் மறைமுகமாக ஓட்டு வாங்கும் பிரசாரமாகும்.

இப்போது தேர்தல் முடிந்துவிட்டதாலும், சுங்க அதிகாரியே கடத்தல் கதையை மறுத்துள்ளதாலும் இது இத்துடன் அடங்கிவிடுமென்றே எதிர்பார்க்கலாம்.

ಃ ಃ ಃ

தமிழகத்தில் பல இடங்களில் ரூபாய்க்கு ஒரு படி [சுமார் இரண்டு கொத்து] கொடுப்பதால், இலங்கையிலிருந்து எந்த முட்டாள் கூட அரிசியை இச்சமயம் தமிழகத்துக்கு அனுப்பமாட்டாரென்றும், இங்கேயே அரிசிக்கு அதிக விலை கிடைக்கிறதென்றும் விஷயமறிந்த ஓரன்பர் தெரிவிக்கிருர்.

ಃ ಃ ಃ

நெஞ்சமென்பதோர்
நீள்கயந் தன்னுள்ளே
வஞ்சமென்பதோர் வான்
சுழிப்பட்டு நான்
துஞ்சும் போழ்து நின்னு
மத் திருவெழுத்து
அஞ்சுந் தோன்ற அருளும்
ஐயாறனே!

—அப்பர் சுவாமிகள்.

[திருவையாற்றுத் தலத்தின்கண் எழுந்தருளியுள்ள இறைவரே! மனமாகிய ஆழமான நீர்நிலைக்குள்ளே, வஞ்சனை என்பதொரு தப்ப இயலாத பெரிய சுழியின்கண் அகப்பட்டு, உணர்வு இழக்கும்போது, தேவரீர் திருப்பெயராகிய திருவைந்தெழுத்தும் என் மனதில் தோன்ற [illegible] அருள் செய்வீர்களாக!]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு நாடு வெளியுறவு மந்திரிகள் நியூயோர்க்கில் கூடிப் பேசினர்

## யூ தாண்ட் முயற்சியின்பலன்!

நியூயோர்க்,செப்.27

**அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டிஷ், பிரான்ஸ் ஆகியநான்கு நாடுகளினதும் வெளியுறவு மந்திரிகள், நேற்று நியூயோர்க்கில் சந்தித்துப்பேசினர்.**

**கடந்த இரண்டு வருடங்களில் இந்நாடுகளின் வெளியுறவு மந்திரிகள் ஒன்ருகக் கூடிப்பேசுவது இதுதான் முதல் நடவையாகும்.**

நான்கு வெளியுறவு மந்திரிகளும், ஐ.நா. பொதுக்காரியதரிசி யூதாண்ட் நேற்றிரவு அளித்த போசனவிருந்தில் கலந்துகொண்டனர்.

இவ்விருந்தில், நான்கு வெளியுறவு மந்திரிகளையும் யூ தாண்டையும் தவிர, யூதாண்டின் சிரேஷ்ட உதவி அதிகாரி திரு. நரசிம்மனும் மற்றும் நான்கு நாடுகளினதும் பிரதான ஐ.நா. பிரதிநிதிகளும் மட்டுமே கலந்துகொண்டனர்.

விருந்துக்கு முன்னர், பத்திரிகையாளரிடம் பேசுகையில், விருந்தில் பங்குபற்றும் நாடுகள், எந்தப் பிரச்னையையும் கிளப்பலாமென யூதாண்ட் தெரிவித்தார்.

ஆனால், வெளியுறவுமந்திரிகளின் இச்சந்திப்பு, குறிப்பிடத்தக்க பலன் எதையும் அளிக்கமுடியுமெனத் தாம் நம்பவில்லையென அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஒருமாமூல் மரியாதைக் கூட்டமாகவே அது அமையும் என அவர்கள் கூறினர்.

## மலேஷியாவுக்கு இலங்கைபபிரதமர்

கோலலம்பூர்,செப்.27

இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா, அடுத்த மாதம் முதல்வாரத்தில் மலேஷியாவுக்கு விஜயம் செய்யவிருக்கிருர் என மலேஷிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன

அவரது மலேஷிய விஜயத்தின்போது, ரப்பர் விலை பற்றி திரு. டட்லி சேனநாயக்கா, மலேஷியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மானுடன்பேசுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

# ஒவ்வொரு ராஜ்யமும் தனி உணவுமண்டலம்

## ராஜ்ய முதல் மந்திரிகள் மாநாட்டில் முடிவு

புதுடில்லி, செப். 27

இந்தியாவின் உணவு நிலைமையை ஆராய, நேற்றுப் புதுடில்லியில் ராஜ்ய முதல் மந்திரிகள் மாநாடு ஆரம்பமாகியது. இன்று மாநாடு முடிவடைகிறது.


நேற்று புதுடில்லியில் சந்தித்த முதல் மந்திரிகள், ஒவ்வொருராஜ்யமும்ஒவ்வொரு தனி உணவு மண்டலமாக இருக்கும் தற்போதைய ஏற்பாடு நீடிக்கவேண்டுமென்பதை ஒப்புக்கொண்டுள்ளனர்.

கூட்ட ஆரம்பத்தில், உயர்ந்தபட்ச கொள்வனவு. கையிருப்பு ஆகியவற்றின் அவசியத்தைப் பிரதமர் திருமதி இந்திரகாந்தியும், மத்திய உணவுமந்திரி திரு. ஜகஜீவன்ராமும் வலியுறுத்தினர்.

நேற்றைய கூட்டத்தின் இறுதியில், பத்திரிகையாளரிடம் பேசுகையில், மண்டலமுறை இறுதியில் அகற்றப்படவேண்டுமென எல்லா முதல்மந்திரிகளும் கருதியதாக உணவு மந்திரி திரு. ஜ. ஜீவன்ராம் கூறினர்.

# காந்தியின் 100-வது பிறந்ததின விழா

## இந்தியா வெங்கும் 1969-ல் சிறப்பாகக் கொண்டாடப்படும்



புதுடில்லி, செப்.27

மகாத்மாகாந்தியின் நூருவது பிறந்ததின விழா, 1969ல் இந்தியா எங்கும் விமரிசையாகக் கொண்டாடப்படவிருக்கிறது.

விழாவின் சிறப்பம்சங்களில் ஒன்ருக, ராஜ்காட்டுக் கருகே சர்வதேச கண்காட்சி விழா இடம் பெறும். இக் கண்காட்சியில், மகாத்மா காந்தியின் உடைமைகள், அவரது வாழ்க்கை வரலாற்றைவிவரிக்கும் படங்கள், நூல்கள் ஆகியவை இடம் பெறும்.

**கருத்தரங்கு**

இரண்டு சர்வதேச கருத்தரங்குகள் பாரிசிலும், புதுடில்லியிலும் நடைபெறும்.

பல்வேறுமொழிகளில்காந்தியின் உருவம் பொறித்த நாணயங்கள், ரூபாய்நோட்டுக்கள், தபாற்தலைகள், இவற்றை வெளியிடும்படி இந்திய அரசாங்கத்தைக்கேட்க விருப்பதாக நூற்ருண்டு விழாக் கமிட்டிக்காரியதரிசி டாக்டர்திவாகர் தெரிவித்துள்ளார்.

**தொண்டர்படை**

வீட்டுக்கு வீடு சென்று மகாத்மாவின் போதனைகளைப் பிரசாரம் செய்யத் தொண்டர்படை திரட்டப்படுமென்றும் டாக்டர் திவாகர் தெரிவித்துள்ளார்.

**நினைவுநூல்**

மகாத்மா காந்தியின் நினைவு நூல்ஒன்றுக்கு ஆசிரியராக இருக்க, இந்தியாவின் முன்னுள் ராஷ்டிரபதி டாக்டர் ராதா கிருஷ்ணன் ஒப்புக் கொண்டுள்ளார்.

## பத்துவாரம் கடலில் தவித்தார்

சாதம்[யூ.எஸ்.[செப்.27

பத்துவார காலமாக அட்லாண்டிக் சமுத்திரத்தில் அலைந்து கொண்டிருந்த நெல்ஸ் நெல்ஸன் என்ற மாலுமியை நேற்றுக் கடற்கரைக்காவலர்கள் காப்பாற்றினர்.

இவருக்கு வயது 64. இவர், சுவீடன் செல்ல சிகாக்கோவிலிருந்து மே முதலாம் திகதி புறப்பட்டார். ஆனல், ஜூலை 11-ம்திகதி, அவர்படகு, புயலினுல் தாக்குண்டு பலத்த சேதத்துக்குள்ளாகியது.

அமெரிக்காவுக்குத் திரும்பமுடியாமல் அவர் கடலில் அலைந்து கொண்டிருந்தார்.

குடிதண்ணீர் இல்லாமல், உணவும் இல்லாமல் தவித்தபோது, அவர் காப்பாற்றப்பட்டார். அவர் பின்னர் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

# தென் அராபிய சமஷ்டியில் தேசிய அரசாங்கம் அமைத்தல்

## தேசிய ஸ்தாபனங்கள் இரண்டும் கெயிரோவில் கூடி ஆராயும்

கெயிரோ, செப்.27

தென் அரபிய சமஷ்டியில் இரு முக்கிய தேசிய ஸ்தாபனங்களாகவிளங்கும் தேசிய விடுதலை முன்னணியும், புளொஸியும் அடுத்தவாரம் கெயிரோவில் கூடிப் பேச்சுவார்த்தைகள் நடத்தவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு ஸ்தாபனங்களும் தென் அரபிய சமஷ்டியில் பல பாகங்களிலும் நேரடி மோதலில்இறங்கியிருந்தன. இதன் விளைவாகப் பல நூறு பேர் உயிரிழந்தனர்.

இப்போது, அவை இரண்டும் தாம் இனிச்சண்டையிடுவதில்லையென்றும், போர் நிறுத்தத்துக்குச் சம்மதிப்பதாகவும் தெரிவித்துள்ளன.

**தேசிய அரசாங்கம்**

அடுத்தவாரம் கெயிரோவில் நடைபெறும் சந்திப்பின்போது, தென்அரபிய சமஷ்டியில் ஒரு தேசிய அரசாங்கம் அமைப்பது பற்றி இரு ஸ்தாபனங்களும் ஆராயுமெனத் தெரிகிறது.

சண்டையின்போது தாம் கைப்பற்றிய பிரதேசங்களையும், கைதுசெய்த ஆயுதங்களையும் பரஸ்பரம் பரிமாறிக்கொள்வதெனவும் இரு தேசிய ஸ்தாபனங்களும் ஏற்றுக்கொண்டுள்ளன.

## சர்வதேச அணுசக்தி நாடுகளின் மாநாடு வியன்னுவில் ஆரம்பம்

வியன்னு, செப்.27

சர்வதேச அணுசக்தி நாடுகளின் மாநாடு நேற்றுவியன்னுவில் ஆரம்பமாகியது.

மாநாட்டின் துணைத் தலைவர் பதவிகளுக்கு, இந்தியா உட்பட எட்டு நாடுகள் தெரிவுசெய்யப்பட்டன.

ரஷ்யாவும், அமெரிக்காவும் செய்யும் எந்தவொரு அணுஆயுத பரிகரண ஒப்பந்தமும், அணு ஆயுதம் உற்பத்தி செய்யாத நாடுகளைப் பாதிக்காத முறையில் அமையவேண்டுமென்பதை மாநாட்டில் இந்தியாவும், ஐக்கிய அரபுக் குடியரசும் வலியுறுத்தின.

அத்துடன், அணு ஆயுத உற்பத்தி செய்யாதநாடுகள் அணு சக்தியைச் சமாதான நோக்கங்களுக்குப் பயன்படுத்த வசதிசெய்யப்படவேண்டுமெனவும் அவ்விரு நாடுகளும் கேட்டுக்கொண்டன.

## 'மே. ஆசிய பிரச்னையை ஐ. நா. தீர்க்காதது ஒரு வெட்கக்கேடு'

### பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி கருத்து

நியூயோர்க்,செப். 27

மேற்கு ஆசியப் பிரச்னைக்கு ஐ. நா. பொதுச்சபையால் ஒரு சுமுகமான தீர்வை இதுவரை காண முடியாமைக்கு பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி திரு. ஜோர்ஜ் பிரவுண் இங்கு வருத்தம் தெவிவித்தார்.

மேற்கு ஆசியாவில் போர் முடிந்து மூன்று மாதங்களாகியும் இன்னும் அப்பிரச்னைக்கு ஒரு முடிவு காணமுடியாமல் ஐ. நா. சபை இருப்பது ஒரு வெட்கக் கேடாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

**எல்லை விஸ்தரிப்பை அனுமதிக்க முடியாது**

போரினுல் கிடைத்த பிரதேசங்களை வைத்துக் கொண்டு இஸ்ரேல் தனது எல்லைகளை விஸ்தரிப்பதையோ, கைப்பற்றிய பகுதிகளில் மக்களை அது குடியேற்றுவதையோ அனுமதிக்கமுடியாது என்றும் திரு. பிரவுண் கூறினுர்

அதே நேரத்தில், இஸ்ரேலை அரபுநாடுகள் அங்கிகரிக்கவேண்டியது அவசியமென்றும் திரு. பிரவுண் வலியுறுத்தினுர்.

**வியட்னும்**

வியட்னும் பற்றிக் குறிப்பிடுகையில், அப் பிரச்னையும் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருப்பதையிட்டுத் திரு. பிரவுண் வருத்தம் தெரிவித்தார்.

## தெ.மே. ஆபிரிக்க பிரச்னை

நியூயோர்க், செப். 27

தென்மேற்கு ஆபிரிக்கா செலுத்திவரும் 'மாண்டேற்' ஆட்சி உரிமையைத் தட்டிக் கேட்க ஐ. நா. வுக்கு எவ்வித அதிகாரமுமில்லை எனத் தென் ஆபிரிக்க வெளியுறவு மந்திரி, ஐ. நா. பொதுக்காரியதரிசி யூதாண்டுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'லீக் ஒவ் நேஷன்ஸ்' ஸ்தாபனம், தென்மேற்கு ஆபிரிக்கா மீதான தென் ஆபிரிக்க 'மாண்டேற்' ஆட்சி பற்றிச் செய்திருந்த முடிவுக்கு, ஐ. நா.வின் தீர்மானங்கள் சட்டவிரோதமானவையாக விளங்குவதாகவும் அவர் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## ஐ. அ. குவுக்கு இந்திரா காந்தி

புதுடில்லி, செப். 27

இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, ஒக்டோபர் 20-ந் திகதியில், ஐக்கிய [illegible] செய்வாரென்று அறிவிக்கப் பட்டுள்ளது.

# சீனுவில் ஏவுகணை தயாரிக்கும் ஜெர்மன் ரொக்கெட் நிபுணர்

புதுடில்லி, செப். 27

நீண்ட தூரம் செல்லக் கூடிய ஏவுகணை தயாரிப்பு முறையை உருவாக்குவதில் சீனருக்கு உதவ, கம்யூனிஸ்ட் சீனுவில் மூன்று மாத காலமாக உல்ப்காங்க் பில்ஸ் என்ற ஜெர்மன் ரொக்கெட் நிபுணர் இருப்பதாக அமெரிக்க 'நியூஸ் வீக்' பத்திரிகை கூறியுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சித்தலைவர் வான் பிரானுக்கு உதவியவர் இவர். 1960-ல் ஐக்கிய அரபுக்குடியரசில் ஏவுகணை முறையை உருவாக்கச் சென்ற ஜெர்மன் விஞ்ஞானிகளுக்கு இவர் தலைமை வகித்தார்.

அடுத்த மாதம் சீனு மற்ருெரு அணு ஆயுதசோதனை நடத்தும் என்றும், அது விண் வெளியில் நடக்கக் கூடும் என்றும் அமெரிக்க தகவல் சேவை வட்டாரங்கள் கருதுவதாகவும் பத்திரிகை கூறியது.

## இந்திய பத்திரிகைகளுக்கு புகழ்மாலை

ஹைதராபாத்,செப்.27

இந்திய ஜனநாகத்தின் வலுவுக்கான காரணங்களில் ஒன்று, அதன் பத்திரிகைத் துறையாகும்என்று இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் திரு. ஜோன் பிரீமன் கூறியுள்ளார்.

ஹைதராபாத்தில், பத்திரிகைகள் சங்கம் அளித்த விருந்தொன்றில் பங்குபற்றிப் பேசுகையில், திரு. பிரீமன் இவ்வாறு கூறினுர்.

இந்தியாவில் பல்வேறு பத்திரிகைகள் வெளியிடப்படுவதாகவும், அவற்றில் சிறந்த தலையங்கங்கள், கட்டுரைகள் பிரசுரமாவதாகவும் திரு. பிரீமன் மேலும் குறிப்பிட்டார்.

## ஐ. அ. கு.-இஸ்ரேல் துருப்புகள் மோதின

கெயிரோ, செப். 27

சூயஸ் கால்வாயில் ஐ. அ. கு. துருப்புகளும் இஸ்ரேல் துருப்புகளும், நேற்றுமுன தினம்பாக்கி பிரயோகத்தில் ஈடுபட்டனர்.

ஐந்து நாள் ஓய்வுக்குப் பிறகு நடைபெற்றுள்ள பெரியளவு மோதல் இதுவேயாகும்.

இரு தரப்பிலும் எவ்வித ஆட்சேதமும் இல்லை என அறிவிக்கப்பட்டது.

## மதுவிலக்கு பற்றி நெடுஞ்செழியன்

சென்னை, செப். 27

மதுவிலக்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலாக்கப் படுவரும் எனவும் இதில் தமிழக அரசாங்கம் இலாப நஷ்டக்கணக்குப் பார்க்க மாட்டாது எனவும் தமிழக கல்வி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

[5-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பைத்தியக்காரர் மீது இரக்கம்காட்டுங்கள்'

## மனநோய் வைத்தியர் மாணவரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியாழன் உலகில் இருக்கும் பலவித நோய்களில் ஒன்றுதான் மனநோயும். மற்றநோயால பீடிக்கப் பட்டுள்ளவர்களை நாம் பார்த்துப் பரிகசிப்பதில்லை. ஆனால் மன நோயால் பீடிக்கப்பட்டிருப்பவர்களை நாம் விரும்பியபடியெல்லாம் பரிகசிக்கின்றோம். இது அவர்களது நோயைக் குணப்படுத்த எந்தவகையிலும் உதவா அவர்களுக்கும ஒரு வாழ்வு கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் நம் மனதில் தோன்றி விட்டால் மன நோயால் பீடிக்கப் பட்டுள்ளவர்களின் தொகையைக் குறைக்க அது வழி வகுக்குமென்றே நான் நம்புகிறேன்."

நேற்று முன்தினம் நடைபெற்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் ஜி. சி. ஈ. உயர்தர வகுப்பு மாணவர் சங்கத்தின் வருடாந்த இராப்போசன விருந்து வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து உரைநிகழ்த்திய மனநோய் வைத்தியர் டாக்டர் சி. அருளம் பலம் மேற்கண்டவாறு கூறினார்.

செல்வன் எஸ். பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் விருந்துவைபவத்தில டாக்டர் அருளம்பலம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

நல்ல ஒரு சந்ததியை உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. இந்தப் புனித கடமையைச் செம்மையாக நிறைவேற்றுவதால் நமது எதிர்காலம் ஒளிமயமாகத் திகழ முடியும். ஒவ்வொரு மாணவனும் ஆசிரியரிடம் ஒப்படைக்கப்படும்போது அந்த மாணவனிடத்திலுள்ள தேவையில்லாத விசயங்களைக் களைந்து அவனைப் பூரணமாக்கும் நோக்கத்துடனேயே ஒப்படைக்கப் படுகின்றான் என்பதை ஆசிரியர் உலகம் உணருமென்றே நம்புகின்றேன். ஆசிரியர்கள் பணியை யாரும் மதிப்பிட்டுவிட முடியாது.

மேற்படி கல்லூரியின் பழைய மாணவரான தாம் கல்லூரியில் பயின்ற காலத்தில் எதுவித கசப்பான அனுபவங்களையும் பெற்றிருக்கவில்லையெனவும் அவர் எடுத்துக் கூறினார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை கமிஷனர் திரு. ஹட்சன் செல்வராஜா பேசுகையில் மாணவர்கள் எதிர்காலத்தைப் பற்றி அச்சம் கொண்டிராமல் முழு மனதுடன் தமது கடமையில் ஈடுபடவேண்டுமெனக் குறிப்பிட்டார். மாணவர்கள் இப்போதுஅதிக பொறுப்புக்களை ஏற்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்களென்றும், தோல்விகளைக் கொண்டு சோர்ந்து போகாது துணிவுடன் முயல்வதாலேயே வாழ்வில வெற்றிகாண முடியும் என்றும் கூறினார். தற்கால மாணவர்கள் சமூக சேவைகளில் ஈடுபட்டு வருவது தம்மைப் பெரிதும் கவர்ந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

செல்வன் எஸ். நரேந்திரா செல்வி சக்திநிதி யோகரத்தினம், செல்வன் கே. வைத்திலிங்கம் ஆகியோரும் பேசினர்.

# அரிசியைகொத்தால்அளந்து கொடுக்கிறார்களாம்

யாழ்ப்பாணம், வியா. பருப்பு, மாசி, பால் உணவுப்பொருட்கள் போன்ற அத்தியாவசிய உணவுப்பண்டங்களுக்கு இவ்வாரம் சங்கானைப்பகுதியில் பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இங்குள்ள தனியார் வியாபார ஸ்தலங்களில் பங்கீட்டு அரிசி நிறுத்துக் கொடுப்பதற்குப் பதில் பழையமுறைப்படி கொத்து மூலம் பாவனையாளர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது எனப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். தீப்பெட்டியும் அதிக விலைக்கு விற்கப்படுவதாகத் தெரிகிறது. பாவனையாளர் வாங்கும் பொருட்களுக்கு பற்றுச்சீட்டுக்களையும் கொடுக்க வியாபாரிகள் மறுப்பதாகத் தெரிகிறது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியாழன் 28-9-67

[செய்திகள் காலை 7-00, பகல் 12-15, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு. 7-30 குரல் வகை. 7-45 கிராமிசை 8-15 இஸ்லாமியகீதங்கள்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை

மாலை 5-00 [illegible] வாழ்த்துக்கள், 5-3[illegible] நேயர்விருப்பம்.

இரவு 6-15 தமிழ்மொழிப் பாடல், 6-30 பேச்சு, 6-45 கிராமசங்கீதம், 7-15 தாள வாத்தியக்கச்சேரி, 7-45 நாடகம், 8-00 [illegible] திருச்சி, 9-30 [illegible] சேவை — என். [illegible] முகந்தம்.


# 5

இந்த 5 சொற்கள்

★ நீடித்து உழைப்பது
★ சௌகரியமானது
★ நவீனமானது
★ சிக்கனமானது

# எஸ்-லோன் பீலியை உருவாக்க உதவின

உறுதியான எஸ்-லோன் பீவீசீ மழைநீர்ப் பீலிகள் நிரந்தர உழைப்பை நினைவில் வைத்துத் தயாரிக்கப்பட்டவை. உலோக மழைநீர்ப் பீலிகளை அரித்தழிக்கும் கறளுடன் கட்டியழும் பிரச்சினை. விழலுக்குப் பணத்தை வீணே விரயமாக்குவோருக்கே இனிச் சொந்தம்!

இலகுவில் பொருத்தக்கூடிய மழைநீர்ப் பீலி இது. இதைப் பொருத்த அதிக வேலையாட்கள் அவசியமேயில்லை. கறள் அரித்த உலோகப் பீலியைக் கழற்றி வீசும் அதேயளவு விரைவாக இந்தப் பீலியைப் பொருத்தி விட முடியும்.

நவமான வீடுகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும். அவற்றின் புதுப் பாணிக்கு உகந்த அழகு வனைவுள்ள எஸ்-லோன் பீலிகளைப் பொருத்துவதே பொருத்தம். பழைய பத்தாம் பசலியான விலை கூடிய உலோக வடிகால் ரகப் பீலிகளுக்கு விடை கொடுங்கள். உங்கள் கட்டிடங்களுக்கு எஸ்-லோன் கொண்டு உன்னதமான புது மெருகூட்டுங்கள்.

நாளது வரை, மழைநீர்ப் பீலிகளில் மகத்தான இலாபக் கொள்முதல் எஸ்-லோன். இடி மின்னல் அடை மழைக்குப் பின் இடைக்கிடை பீலி மாற்றும் இடர்ப்பாடுகள் இனி இல்லை அந்தக் கவலையை விட்டொழிக்க விரும்புவோர்க்கென்றே தயாரானது எஸ்-லோன்!

S-lon

எஸ்-லோன் — குழாய்த் தொழிலில் அதி சிறந்த இலவச தொழில் நுட்ப ஆலோசனையினதும் சேவையினதும் ஆதாரம் கொண்டது.

மகாராஜா ஓர்கனிசேஷன் லிமிட்டெட்

Maharaja Organisation

MOP-72


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்:

# சென்பற்றிக்ஸ் யூனியனை வென்றது

குரும்பசிட்டி, புதன் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி முதற்பிரிவுக் கோஷ்டிக்கும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முதற் பிரிவுக்கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரிக் கோஷ்டி 4—0 கோல்களால் யூனியன் கல்லூரிக் கோஷ்டியைத் தோற்கடித்தது. இடைவேளையின் போது கோல் எண்ணிக்கை 2-0 ஆக இருந்தது. யூனியன் கல்லூரி முன்னணி வீரர்கள் திறமையாக விளையாடியபோதிலும் எதிர் தரப்புக் கோல்காப்பு வீரர் பின்னணி வீரர்களின் சிறப்பான ஆட்டத்தினால் எந்த ஒரு கோலும் போட்டுக்கொள்ள முடியவில்லை. இப்போட்டிக்கு திரு. கே. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இக் கல்லூரிகளின் இரண்டாம் பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையே நிகழ்ந்த உதைபந்தாட்டப் போட்டியிலும் சென். பற்றிக்ஸ் கல்லூரி வீரர்கள் 2—0 கோல்களால் வெற்றிபெற்றனர். தெல்லிப்பழை யூனியன் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் மேற்படி இரு போட்டிகளும் நடைபெற்றன.

## மதுவிலக்கு பற்றி . . .

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவின் போதே திரு. நெடுஞ்செழியன் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. நெடுஞ்செழியன் மேலும் கூறியதாவது:-

'பிறருக்காகத் தமது தேவைகளைக் குறைத்துக் கொண்டவர் காந்திஜீ. பிறரது உரிமைகளைப் பெறுவதற்காக தம்மையே தாம் வருத்திக்கொண்டவர் அவர் மதுரையில் அவர்கண்ட காட்சி அவரது ஆடைகளை மேலும் குறைக்கச் செய்தது.'

நாடு தனது சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள காந்திஜீ காட்டிய வழியைப் பின்பற்றவேண்டுமெனக் கேட்டுக்கொண்ட திரு. நெடுஞ்செழியன் இருக்கும் நிலத்திலெல்லாம் பயிர் செய்ய மக்கள்முன்வர வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

## சீனக்குடியரசு தேசியதினம்

யாழ்ப்பாணம், வியாழன் மக்கள் சீனக் குடியரசு தேசிய தினக் கூட்டம் அக்டோபர் மாதம் 1-ம் திகதி மாலை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெறும்.

திரு. ஏ. எஸ். கனகரத்தினம் தலைமையில் நடைபெறும். இக் கூட்டத்தில் திருவாளர்கள்:- கே.ஏ. சுப்பிரமணியம், எம். மஜீத், எஸ். சேவற்கொடியோன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

இலங்கை-சீன நட்புறவுச் சங்கத்தின் யாழ். பிரதேசக் கிளை நடாத்தும் இக் கூட்டத்தில் தாய்ச் சங்கப் பிரதிநிதியும் கலந்து கொள்வார்.

## பஸ்-கார் மோதல்

சங்கானை, புதன் கடந்த செவ்வாய்க்கிழமை அராலி தெற்கில் நடைபெற்ற கார்-இ.போ.ச.பஸ் விபத்தில் காரின் முற்பகுதி பலத்த சேதத்திற்குள்ளாகியது. எவரும் பலத்த காயங்கட்குட்படவில்லை. சங்கானை பொலிஸார் நடாத்திய விசாரணையில் இரு வாகனங்களும் பரிசோதனைக்காக நிறுத்தி வைக்கப்பட்டன.

# "வடக்கில் நல்ல விளையாட்டு வீரர்கள் இருக்கிறார்கள்"

## அரசாங்கஅதிபர் வேர்ணன்கூறுகிறார்

யாழ்ப்பாணம், வியா. "சனசமூக நிலையங்களின் மூலமே நாட்டை வளம்படுத்தமுடியுமென்ற காரணத்தினாலேயே இப்பொழுது சனசமூக நிலையங்கள் கிராம முன்னேற்ற இலாகாவுக்கு மாற்றப்பட்டுள்ளன."

யாழ். சனசமூக நிலையங்களின் விளையாட்டுச் சங்கத்தினால் முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்ட மெய் வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா மேற்கண்டவாறு கூறினர். இப்போட்டி நேற்று யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றன.

அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது: "வடபகுதி விளையாட்டு வீரர்களுக்கு நல்ல பயிற்சியளிக்கப்பட்டு வருமேயானால் கட்டாயம் ஓரிருவராவது சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில்கூட கலந்துகொள்ள முடியும். எதிர்வீரசிங்கம் போன்றவர்களை வடபகுதியில் தருவிக்கும் நோக்கமாகவே அரசாங்கம் இப்பொழுது புதிய அரசாங்க உடற்பயிற்சிப் போதனாசிரியர்களை நியமித்துள்ளது. எனவே யாழ்ப்பாண விளையாட்டுவீரர்கள் இப்போதனாசிரியர்களுடன் தொடர்பு கொண்டு சிறந்த விளையாட்டுப் பயிற்சிகளைப் பெற வேண்டும்" என்றார்.

13 சனசமூகநிலையங்களுக்கிடையே நடைபெற்ற சனசமூக நிலையங்களின் விளையாட்டுப் போட்டியில் முதலாவது இடத்தை அரியாலை சனசமூக நிலையமும், 2ம் இடத்தை கொக்குவில் மஞ்ஞன்மணி சனசமூகநிலையமும், 3ம் இடத்தை நாவாந்துறை சென்.மேரிஸ் சனசமூக நிலையமும் பெற்றன.

திருமதி வேர்ணன் அபயசேகரா வெற்றிபெற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் பரிசில்களை வழங்கினர். (வி. நி.)

# "யாழ். மாவட்ட சாரணரே முன்னிற்கிறார்கள்"

யாழ்ப்பாணம், வியாழன் "இலங்கை பூராவிலுமுள்ள சாரணஇயக்கங்களில் யாழ்ப்பாண மாவட்ட சாரணர்களே முன்னணி வகிக்கிறார்கள். சிறுவயதிலேயே இவர்கள் பழகிக்கொள்ளும் சாரண இலட்சியங்களும் அடிப்படைக் கொள்கைகளும் வாழ்க்கை பூராவும் இவர்களை ஒரேஇலட்சியத்துடனும் பரந்த மனப்பான்மையுடனும் வாழ வழிவகுக்கின்றது. இதற்கு சாரண மாணவர்களுக்கு பெற்றோரும் பொதுமக்களும் பூரண ஒத்துழைப்பு அளிக்கவேண்டும்."

மேற்கண்டவாறு யாழ்ப்பாணம் பழைய பூங்காவில் நடைபெற்ற யாழ்.மாவட்ட சாரணர் சங்க வருடாந்த பாசறை விழாவின் முதலாம் நாள் வைபவத்துக்குத் தலைமைவகித்த முன்னாள் கூட்டுறவுப் பகுதி உதவி ஆணையாளர் திரு. ஆர். சி. எஸ். குக் பேசுகையில்குறிப்பிட்டார். சுமார் 40 பாடசாலைகள் பங்குகொள்ள இவ் விழாவில் 1200 மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இவ்வைபவத்தில் திரு. குக் மேலும் பேசுகையில், சகல மாணவர்களுமே சாரணர் இயக்கத்தில் கலந்துகொண்டால் நாட்டில் ஒழுங்கீனங்களும், காடைத்தனங்களும் இடம்பெறவே முடியாது என்றார்.

இரண்டாம்நாள் வைபவத்துக்கு, வடபகுதி வித்தியாதிபதி திருமதி. ஆர். ஆர். நவரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில் வழங்கினர். இவர் இங்கு பேசுகையில் சகல பாடசாலைகளுக்கும் சாரணர் இயக்கம் அத்தியாவசியம் என்றும், இது சாதி. மத, இன பாகுபாடு அறவே ஒழிய வழிகோலுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

சகலபோட்டிகளிலும் முதலிடத்தைப் பெற்ற உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம் சிறந்த குழுவுக்கான கேடயத்தைப் பரிசாகப்பெற்றது. இரண்டாம் மூன்றும் இடங்களை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் பெற்றன. சுதந்திரதின விழாவைமுன்னிட்டு யாழ் மாவட்ட சாரணர்களுக்கு மகாதேசாதிபதியால் வழங்கப்பட்ட கௌரவப் பட்டங்களும் இங்கு வழங்கப்பட்டன. [ந. நி.]

# வரிவிளம்பரம்

## தேவை

மனேஜர்

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபலமான படமாளிகை ஒன்றில் கடமையாற்ற அனுபவமுள்ளமனேஜர் தேவை. ஆங்கிலம் நன்கு தெரிந்தவராகவும், பிணைப்பணம் கட்டக்கூடியவராகவும் இருத்தல்வேண்டும். விரும்புவோர் 5-10-67 க்கு முன் விளம்பர இல. 2394 மே/பா 'ஈழநாடு', த.பெ. எண். 49, யாழ்ப்பாணம் என்றவிலாசத்திற்குஎழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2394

மனேச்சர்:

கோட்டா உடைய அரிசி ஆலை ஒன்றை நடாத்துவதற்குத் திறமையான மனேச்சர் ஒருவர் உடன் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும். மனுச்செய்யவேண்டிய விலாசம் அ. சொக்கலிங்கம் அன் சன்ஸ், பலாலி றோட், கோண்டாவில். 2392

## விற்பனைக்கு

பாடப்புத்தகங்கள்:

ஸ்ரீ காந்தா அச்சக வெளியீடு: தமிழ் இலக்கிய வினாவிடை G. C. E. வகுப்பு 1967. [1] "அ" பாடத்திட்டத்திற்குரிய உரைநடைத் தொகுப்பும் செய்யுள் தொகுப்பும். [2] மந்தரை சூழ்ச்சிப்படலம் கைகேயி சூழ்வினைப்படலம். [3] பாரதச் சுருக்கம். இவைகளிலிருந்து தெரிந்தெடுத்த 12 மாதிரி வினாப் பத்திரங்களும் விடைகளும் சந்தர்ப்பம் கூறும் பகுதிகளும் சேர்ந்து விலை 2 ரூபா. ஸ்ரீகாந்தா அச்சகம், புத்தகசாலை, 213, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 2396

## கல்வி

வகுப்புகள்:

G. A. Q. வகுப்புகள் போயா தினங்களில் யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயத்தில் ஆங்கிலம், தமிழ், புவியியல், பொருளியல் ஏனையவை நடைபெறும். C. S. ராஜரத்தினம், காரியதரிசி, U. S. T. T. A. R. 2550

## அமெரிக்காவின்.....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விஷன்' பொருத்தி சத்திர சிகிச்சைகள் கப்பலில் நடக்கும்போது இலங்கை மாணவர்கள் 'ரெலிவிஷன்' மூலம் பார்த்து அறிந்துகொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.


இப்பொழுது வெற்றிகரமாகக் காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]

தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு

விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிஷ்ணா [திருமலை]

மொடேர்ன் [பண்டாரவளை] விஜிதா [ஹட்டன்] கல்யாணி [நாவலப்பிட்டி]

அக்டோபர் 1-ம் திகதி முதல்

வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

ஜெய்சங்கர் — பேபிபத்மினி

சாந்தா, சுந்தரராஜன், ஜமுனா, நாகேஷ், ஷேபா, ஜி. வரலக்ஷ்மி

எம். எஸ். எஸ். பாக்கியம்

முதலியோர் நடித்த

1965-ம் ஆண்டின் சிறந்தபடமென இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப்பதக்கமும் பாராட்டும் பெற்ற சிறந்த சித்திரம்

கள்ளமில்லா உள்ளத்தினால் பிள்ளைகளெல்லாம்என்று கண்ணெதிரே காணுகின்ற தெய்வங்களானார்.

ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

குழந்தையும் தெய்வமும்

4-வது வெற்றி வாரம்:

கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

ஜெய்சங்கர்- எல்.விஜயலக்ஷ்மி முதலியோர் நடித்த

நாம் மூவர்



ராஜா RAJAH

யாழ்ப்பாணம் JAFFNA.

Daily at 4-45, 7-00 & 9-45

Yul Brynner in

ESCAPE FROM ZAHRAIN

நியூ காலிங்கன் [இணுவில்]

தினசரி 6-30, 9-30 மணி

விடுமுறைதினங்களில் 2-30

எம்.ஜி.ஆர்.சரோஜாதேவி நடித்த

பெரிய இடத்துப்பெண்

மனோஹரா [யாழ்ப்பாணம்]

தினசரி: 6-30, 9-30

போயா தினங்களில் 3 காட்சிகள்

எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி நடித்த

ஆசை அலைகள்

REGAL JAFFNA

Time: 4-45 7-00 p. m. 9-45 p. m.

Marshall Thampson

Dave Dalie

in

THE MIGHTY JUNGLE in Technicolor



மட்டக்களப்பு ஆனைப்பந்தி

பிள்ளையார் கோவில்

பிரம்ம ஸ்ரீ வி. வரதராஜக் குருக்கள் எழுதுவது:

சுந்தரம் பிரதர்ஸ்,
73, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

அன்புடையீர்,

நீங்கள் அனுப்பி வைக்கும் பச்சைச் சந்தனம் சுத்தமானதாகவும் நறுமணமுள்ளதாகவும், தூய்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆனைப்பந்தி பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தி பணிந்து அருள் பெறுகிறார்கள் அடியார்கள். உங்கள் சேவை தொடர்ந்து நடந்துவர வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்தி விக்னேஸ்வரனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு

வி. வரதராஜக்குருக்கள்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அண்ணாவுடன் இலங்கை ஸ்தானிகர் பேட்டி

சென்னை, செப். 26

இந்தியாவில் இலங்கை ஸ்தானிகராக இருக்கும் திரு. பெரேரா தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரையைச் சந்தித்துப் பேசியிருக்கின்றார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா திரும்பும் இந்திய வம்சாவழியினரைக் குடியமர்த்துவது பற்றியும் அவர்களுக்கு இலங்கை அரசாங்கம் கொடுக்கும் உதவிகள் பற்றியும் திரு. பெரேரா முதலமைச்சர் அண்ணாதுரையுடன் முக்கியமாக ஆலோசனைகள் நடத்தியிருக்கக்கூடும் என்று கருதப்படுகின்றது.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்கீழ் இந்தியா திரும்பும் இந்திய வம்சாவழியினரின் முதல் கோஷ்டியினர் அடுத்த ஆண்டின் முற்பகுதியில் இந்தியா திரும்புவார்கள் என்று திரு. பெரேரா இங்கு தெரிவித்துள்ளார்.

அண்மையில் இலங்கைக்கு இந்தியப் பிரதமர் திருமதி காந்தி செய்த விஜயம் இரு நாடுகளுக்கும் பயனுள்ளதாகவும், நல்லுறவையும் பலப்படுத்துவதாகவும் அமைந்தது என்று திரு பெரேரா கூறியுள்ளார்.

## 'சுதந்திரம் காப்பதற்கு செய்யவேண்டிய தியாகம்'

யாழ்ப்பாணம், புதன்

''பரவலான சுதந்திரத்தைப் பேணவேண்டுமானால் நமது சிறு சிறு உரிமைகளைத் தியாகம் செய்யவேண்டும்.''

கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலைக் கலைமன்றத்தினரின் ஆதரவில், அதிபர் திரு. வி. எஸ். லிஸ்லலிங்கம் தலைமையில் ''குடிவாழ்வும் குடியை நீதியும்'' என்ற தொடரில் சிறப்புச் சொற்பொழிவாற்றிய திரு. வ. பொன்னம்பலம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ஜனநாயகம் என்பதை மேலைத் தேசத்தவரிடமிருந்து நம்மவர் கற்கவில்லை, தொன்று தொட்டு இம்முறை இருந்து வந்திருக்கின்றது. சோழநாட்டின் 'குடவோலைத்' தெரிவு முறையும் பௌத்த துறவிகளின் தெரிவு முறையும் நம் நாட்டின் 'கன்சபா' முறையும் ஜனநாயகத்தை வலியுறுத்துகின்றதெனக் கூறிய அவர், தனிமனித சுதந்திரம் வேண்டுமென்பதற்காகப் பிறரின் சுதந்திரத்தில் தலையிடல்வேண்டுமென்பதல்ல எனவும், சமூகத்தின் சுதந்திரம் கட்டிக்காக்கப்படவேண்டுமானால் அதற்காகச் சில சுய சுதந்திரங்களை விட்டுக்கொடுத்தே வாழவேண்டுமென்றும்கூறிஅமரர் நேருவின் அமுதவாக்கையும், மேலும் பல அரிய கருத்துக்களையும் எடுத்து விளக்கினார்.

செயலாளர் திரு. அ. அந்தோனிமுத்து நன்றி கூறினார்.

## பொலிஸ் கான்ஸ்டபிள் தற்காலிக வேலைநீக்கம்

யாழ்ப்பாணம், புதன்

'யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிளான றெஜிஸ் என்பவர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இம்மாதம் 4-ந் திகதி இரவு யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையப்பாதுகாப்பு அறையில் இறந்து கிடந்ததாக அறிவிக்கப்பட்டகோப்பாயைச் சேர்ந்த செல்லன் செல்லத்தம்பியின் மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. எம். ஜமீல் இது ஒரு கொலையெனத் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்தே கான்ஸ்டபிள்றெஜிஸை யாழ்ப்பாணம் பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தற்காலிகமாக வேலையினின்றுநிறுத்திவைத்துள்ளார்.

மரணமானவர், சம்பவம் நடந்த தினத்தன்று இரவு நல்லூர் சட்டநாதர் கோவிலடியில் ஒரு பெண்ணின் தங்கநகையைத் திருடினாரென்று சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணம் பொலிஸ்நிலையப்பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த போது இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் விசாரணை நடத்தியது தெரிந்ததே.

இறந்தவரின் உடம்பில் காயங்கள் காணப்பட்ட போதிலும் குறித்த நேரத்தில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிசார் அவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கத் தவறிவிட்டதாக மாஜிஸ்திரேட் தெரிவித்ததைத் தொடர்ந்தே, இவர் மீது இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. [ந.நி.]

## இறந்தவருக்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடராசா சுப்பிரமணியம், முருகேசு சண்முகம் ஆகிய மூவரும் கொலை செய்ததர்க்க் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1-ம் எதிரி சார்பில் அட்வக்கேட் திரு. ஏட்லி பெரேரா புறக்டர் வி. செல்லத்துரையின் அனுசரணையுடன் ஆஜரானார். 2-ம்எதிரி சார்பில் அட்வக்கேட் திரு. அரசுவால்டன், புரக்டர்கள் ஆர். விசுவநாதன், பரமசிவம்பிள்ளை ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தின் சார்பில் நியமிக்கப்பட்ட அட்வகேட் எம். தேவசகாயம் மூன்றும் எதிரிசார்பில் ஆஜரானார்.

யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் ''இறந்தவரின் உடலில் 129 வெளிக்காயங்களும், 12 உட்காயங்களும் காணப்பட்டன. முகத்தில் 9 காயங்கள் இருந்தன. எல்லாக் காயங்களும் துப்பாக்கிச்சூட்டினால் ஏற்பட்டவை'' என்று கூறினார்.

## இவர்கள் கஷ்டம்

முல்லைத்தீவு, புதன்

முல்லைத்தீவில் சகல அரசாங்க வீடுகளுக்கும் மற்றும் பொலிஸ் நிலையத்துக்கும் மின்சார வெளிச்சம் கொடுக்கப் பட்டிருந்தும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் விடுதிக்கு மின்சார வெளிச்சம் அளிக்கப்படாதது ஒரு குறையாக விருக்கிறது. மேலும் கடும் மழை பெய்யும் நேரங்களில் அவர்கள் உடைமைகளை தூவானம் நனைத்து விடுவதும் அவர்களுக்குத் துன்பம் தருவதாயுள்ளது.

## 'ஏன்இந்த பாரபட்சம்?'

முல்லைத்திவு, புதன்

கடந்த வாரம் முல்லைத்திவிலுள்ள இரு கூப்பன் கடைகளில் ஒன்றான ப.நோ. கூ. ப. சாலையில் சிலருக்கு நாட்டுப்பச்சை அரிசியும், சிலருக்குப் புழுங்கல் அரிசியும் வழங்கப் பட்டது. அதே நேரத்தில் மற்றக் கடையான தனிப்பட்ட உத்தரவு பெற்ற வியாபாரியின் கடையில் கூப்பனுக்கு பச்சை அரிசி மாத்திரம் வழங்கப் பட்டது. ஏன் இந்தப் பாரபட்சம் எனச் சிலர் வவனியா உதவி உணவுக் கட்டுப் பாட்டதிகாரிக்கு முறையிட்டுள்ளனர்.

## கோடீஸ்வரன்....

6-ம் பக்கத் தொடர்ச்சி

தனதிகாரி:- திரு. செ. கோடீஸ்வரன் ஆகியோர் திரு. பொன்னம்பலத்தைச் சந்தித்தனர்.

அப்பீல் செய்வதற்கான நிதி உதவி அளிப்பதில் சொந்த முறையில் தம்மாலான உதவி யளிப்பதாகவும் காங்கிரஸ் நிதி உதவி அளிப்பதனால் அதன் சொற்குழுவைக் கூட்டி ஆராய்ந்த பின்னரே முடிவு செல்ல முடியுமென்றும் தெரிவித்தாராம்.

கோடீஸ்வரன் அப்பீல் நிதிக்கு அரசாங்க ஊழியர் மட்டுமல்லாது பொது மக்களும் மனமுவந்து நிதிஉதவி அளிக்க முன் வந்துள்ளனரென்றும் சங்கத் தலைவர் திரு. வித்தியானந்த சர்மா தெரிவித்தார்.

## மாவட்ட சபையல்ல...

1-ம் பக்கத் தொடர்ச்சி]

அதிகாரங்களை நாம் பெற முடியும். மாவட்டசபை நிறுவப்படும்போது மந்திரிப்பதவியிலிருந்து ராஜினாமாச் செய்து மாவட்ட சபையின் தலைவராகக் கடமைபுரிய உதவிஅமைச்சர் ஜனாப் முஸ்தாபா கூட விருப்பம்கொண்டுள்ளார்.

''அமரர் வன்னியசிங்கம் கிழக்கு மாகாண மக்கள் மீது அன்பும் பற்றும்கொண்டவர். வன்னியசிங்கத்திற்கு நினைவுவிழா கொண்டாடுவதுடன் நின்றுவிடாது அவரது பேச்சுக்களை புத்தக வடிவில் ஆக்கியும் அழியாத நினைவுச்சின்னம் அமைத்தும் வருங்காலச் சந்ததியினர் உரிமையுடன் வாழ வழிஅமைத்துக் கொடுக்க வேண்டும்.

செனட்டர் திரு. சு. நடராசா, உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## சங்கானையில் கோழிக் கள்ளர்

சங்கானை, புதன்

சங்கானை மடத்தடியில் கடந்த சில காலமாக கோழிக் களவு [illegible] களுக் கொருமுறை நடைபெற்று வந்த இக்களவு அண்மையில் தொடர்ந்து நடைபெற்று வருவதால் இச்சுற்றுடலில் உள்ளோர் கோழிகளைத் திறந்து விட அஞ்சுகின்றனர்.

# மூதூர்க் கடிதம்

— நமது நிருபர் —

மூதூர், புதன்

திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளும் புதிய கல்வித் திட்டத்தின் கீழ் தரம் வகுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் திருமலை மாவட்ட உயர்கல்லூரியாக இந்துக் கல்லூரி திகழும். கலை, விஞ்ஞானப் பகுதிகளடங்கிய ஆண்கள் உயர் கல்லூரியாகவும் இது திகழும். இதே போன்று பெண்களுக்கான உயர்கல்லூரியாகக் கலைப்பகுதிக்கு ஸ்ரீ சண்முக வித்தியாலயமும், விஞ்ஞானப்பகுதிக்கு செண். மேரியஸ் வித்தியாலயமும் இயங்கும். மூதூர்பகுதிக்குமூதூர் மகாவித்தியாலயமே முழுமைபெற்ற உயர் பீடமாய் விளங்கும். தோப்பூர் மகா வித்தியாலயத்தின் 8-ம் வகுப்புக்கு மேற்பட்ட வகுப்புகள்மூதூர் மகாவித்தியாலயத்துடன் சேர்க்கப்படும்.

கிண்ணியா, தம்பலகாமம், குச்சவெளி, கந்தளாய் ஆகிய மகாவித்தியாலயங்கள் தொடர்ந்தும் பழைய தரப்படியே உயர்நிலைப்பள்ளிகளாகத் திகழும். ஏனைய சகல பாடசாலைகளும் 7-ம் வகுப்புடனேயே வகுப்புகளை நடாத்தும். மூதூர் பகுதியில் வதியும் சுமார் 20ஆயிரம் தமிழ் மாணவரின் வசதி குறித்துதமிழ் மகா வித்தியாலயம் ஒன்றை கல்விப்பகுதி சிபார்சு செய்யாமை குறித்து மூதூர்ப் பகுதித் தமிழர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். இதையிட்டு ஆட்சேபம் தெரிவிக்கப் பலர் நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரியவருகிறது.

### மக்கள் கோரிக்கை பலிக்கவில்லை

கடந்த 4 மாதங்களாக மூதூர் பகுதியில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய திரு. வி. பாலகிருஷ்ணன் இடமாற்றம்செய்யப்பட்டுவிட்டார். இவரைஇன்னும்ஒருவருடத்திற்காவது இங்கு கடமையாற்றஅனுமதிக்குமாறு பல இனமக்களும்பலகிராமசபைகளும் ஏனைய சனசமூக இயக்கங்களும் பொலிஸ் தலைவர், பாதுகாப்பு அமைச்சு பிராந்திய சுப்ரின்டன்ட் ஆகியோரைக் கேட்டிருந்தனர். அவர்களது கோரிக்கை நிறைவேற்றப் படவில்லை. கடமையிலேயே கண்ணியமுள்ள இந்த அதிகாரியின் திடீர்மாற்றத்திற்கு என்னதான் காரணமோ எனப் பலரும் பேசிக்கொள்கிறார்கள்.

### பால அமைப்பு வேலைகள் ஏன் இன்னுமில்லை

திருகோணமலை மாவட்டத்தையும், மட்டக்களப்பு மாவட்டத்தையும் இணைக்கும் வெருகல், பனிச்சங்கேணி ஆகிய துறைகளுக்கு பாலங்கள் அமைக்கப்படும் எனக் கடந்த வருடத்தில் பலமாகப் பேச்சு அடிபட்டது. 1966-1967 வரவு செலவுத்திட்ட விவாதத்தின்பின்பு இவைகளுககு ஒதுக்கப்பட்ட தொகைகளும் அறிவிக்கப்பட்டுப் பத்திரிகையிலும் பிரசுரமாகின. பல பொறியியலாளர்கள் வந்து பார்த்ததாயும் தெரியவந்தது. ஆனால் வருடம் ஒன்றரை ஆகியும் பால அமைப்புக்கான நடவடிக்கைகள் ஒன்றையுமே இதுவரை காணக்கூடியதாக இல்லை. இவையெல்லாம் பேச்சளவில் தங்கி விட்டதோவென மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

### வெருகலம்பதி விழா முடிந்தது

கிழக்கிலங்கையின் வரலாற்றுப் புகழ் கொண்ட வெருகலம்பதியின் வருடாந்த உற்சவங்கள் கடந்த 23-ந் திகதி நடைபெற்ற தீர்த்தோற்சவ வைபவத்துடன் இனிது முடிவெய்தின. இம் மாதம் 6-ந்திகதி இதன் கொடியேற்று வைபவம் நடைபெற்று தொடர்ந்து 18 திருவிழாக்கள் நடந்தன.

## முதலாளித்துவ...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களுக்கு முன் யாழ்ப்பாணப் பகுதியில்நிலைபெற்ற சாதிப் பாகுபாட்டுநிலை 90 வீதத்துக்குத்தளர்வுற்றிருப்பதை யாம் அறியக்கூடியதாகவுள்ளது. சட்டத்தின் துணைகொண்டுதீயசக்திகளைஅடக்கவேண்டும். ஆலயப் பிரவேசம் போன்றகாரியங்களை யாம் பலாத்காரமற்ற வழிகளிலேதான் சாதித்துள்ளமையை நீங்கள் அறிவீர்கள். எம்மிடையே பலர் சாதிக்கொடுமையை நீக்க வேண்டுமென்ற இலட்சியத்தைக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் எந்தவழியில்வெற்றி கொள்ளலாம் என்பதிலே தான் மாறுபாடு இருக்கிறது''

திரு. எம். சி. சுப்பிரமணியம் இக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார்.

திரு. எட்மண்ட் சமரக்கொடி பேசுகையில் கூறியதாவது:-

உலகத்தின்பலபகுதிகளில் ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளைஎதிர்த்துப்போராட்டம் நடத்தும் இந்தவேளையிலே இங்கு நாம் குறுகிய சாதிப்போராட்டத்தை நடத்த வேண்டியவர்களாகவிருக்கிறோம். இங்கு மாத்திரமல்ல, தென்னிலங்கையிற்கூட இந்த நிலையிருந்தது. அங்கு போராட்ட மூலமேஅந்தக்கொடுமைகள் அகற்றப்பட்டன? இவற்றுக்கெல்லாம் முதலாளித்துவ அரசியல்அமைப்புமுறையே அடிப்படைக் காரணங்களாக அமைந்துள்ளன.

இன்று இங்கு நடைபெறுகின்ற சாதிக்கலவரங்களுக்கு ஒரு சில அரசியல் காவலர்களும் உடந்தை என்பதைஎனக்குச்சிலர்குறிப்பிட்டுள்ளார்கள். அதுஉண்மையானால் எமது அரசாங்கமும்அதற்கு உடந்தைஎன்பதே கருத்தாகும். அந்நிலை நீக்கப்படவேண்டும். இன்று இந்த நாட்டில் இதைவிட மிகப்பாரியதான பொருளாதாரத்தை மாற்றுவதற்கு போராடவேண்டியுள்ளது. இன்றைய அரசாங்கத்தின் ஆட்சியில் உணவுப் பண்டங்கள் நாளும்பொழுதுமில்லாமல் போகின்றன. இவற்றை எதிர்த்து சிங்களத் தொழிலாளர்களுடன் வடக்குக் கிழக்குப்பகுதியிலுள்ளவர்களும் தோட்டப் பகுதிகளிலுள்ளவர்களும் போராடவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

திரு. தா. சங்கரப்பிள்ளை, திரு. ஏ. விஸ்வநாதன், திரு. டீ. ஜே. இராசரத்தினம், திருவாளர்கள் வி.ஏ. கந்தசாமி, அல்பிரட் துரையப்பா எம். கனகரத்தினம் ஆகியோரும் பேசினர். [நி]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org